## கழகத்தின் மூத்த முன்னோடி - 'தந்தை பெரியார்' விருது பெற்ற

# பாப்பம்மாள் நம்மை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டார்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை,செப்.29-**

**கழகத்தின் மூத்த முன்னோடி பாப்பம்மாள் அவர்கள் நம்மையெல்லாம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டார். என் குடும்பத்தில் ஒருவரைப் பிரிந்த வலியுடன் தவிக்கின்றேன் என கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருக்க முடன் தெரிவித்துள்ளார்.**

**கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச் சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27-09-2024), வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

"கழக முன்னோடியும் - கடந்த 17-ஆம் நாள் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பெரியார் விருது பெற்றவருமான திருமிகு. பாப்பம்மாள் அவர்கள் 108 அகவையில் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தியறிந்து கலங்கினேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் - முத் தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் பற்றுக் கொண்டு, கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல் தன்னை இயக்கத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றியவர்.

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டம் தொடங்கி, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காக்க நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வரை அத் தனை போராட்டக்களங்களையும் நெஞ்சுரத் தோடு எதிர்கொண்டவர் அவர்.

1959-ஆம் ஆண்டு தேக்கம்பட்டி ஊராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமிகு. பாப்பம்மாள் அவர்கள், 1964-இல் காரமடை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினராகவும், பின்னர் தேக்கம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பணி யாற்றினார்.

1970-ஆம் ஆண்டு தொடங்கி 45 ஆண்டு காலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உழவர் விவாதக்குழு உறுப்பினராகச் செயல் பட்டார்.

1965-ஆம் ஆண்டிலேயே மாதர் சங்கத் தலைவராகச் செயல்பட்டு, கிராமப் பெண்களின் முன்னேற்றத்துக்கான சமூகப் பணிகளை மேற்கொண்டார்.

தனது இறுதிமூச்சு வரையில், சுறுசுறுப்பாக வயலில் இறங்கி வேளாண் பணிகள் செய்து வந்தவர் திருமிகு. பாப்பம்மாள் அவர்கள்.

திருமிகு. பாப்பம்மாள் அவர்களின் வாழ்வை யும் தொண்டையும் போற்றும் வகையில் ஒன் றிய அரசு சார்பாக கடந்த 2021-ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. அப்போது, "உற்சாகத்துடனும், கொள்கை உணர்வோடும் எப்பொழுதும் புன்னகை மாறாத பாப்பம்மாள் பாட்டி நமக்கெல்லாம் உந்துசக்தி!" என்று அவரை வாழ்த்தினேன்.

கழக முப்பெரும் விழாவில், "ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் அடையாளம்" என அவரை மனம் நெகிழப் பாராட்டி மகிழ்ந்திருந்தேன். ஆனால் இன்று சொல்லொணாத் துயரத்தில் நம்மையெல்லாம் ஆழ்த்தி விட்டு அவர் நம்மை விட்டு பிரிந்துவிட்டார்.

அண்ணா அறிவாலயத்திலும், எனது இல் லத்திலும் திருமிகு. பாப்பம்மாள் அவர்களைச் சந்தித்து உரையாடிய ஒவ்வொரு தருணமும் என் நெஞ்சில் எப்போதும் நீங்காமல் பசுமை யாக இருக்கும்.

என் குடும்பத்தில் ஒருவரைப் பிரிந்த வலியு டன் தவிக்கிறேன். திருமிகு. பாப்பம்மாள் அவர் களை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், உறவி னர்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு கழகத் தலைவர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு அரசில் 51 உதவி வழக்குரைஞர் பணி!

## டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு!

*சென்னை,செப்.29-*

*அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (கிரேடு-2) பதவிக்கான நேரடி நியம னத்திற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம்(டிஎன் பிஎஸ்சி) வெளியிட் டுள்ளது.*

*அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (கிரேடு-2) பதவிக்கான நேரடி நியம னத்திற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம்(டிஎன் பிஎஸ்சி) வெளியிட்டுள் ளது. இதற்கு தகுதியான வர்களிடம் இருந்து வரும் அக்டோபர் 12 ஆம் தேதிக் குள் விண்ணப்பங்கள் வர வேற்கப்படுகின்றன.*

*பணி: அரசு உதவி குற்ற வியல் வழக்குரைஞர் (கிரேடு-2)*

*காலியிடங்கள்: 51*

*தகுதி: ஏதாவதொரு பல் கலை, நிறுவனத்தில் இள நிலை சட்டம் முடித்திருத்த வேண்டும். வழக்குரைஞர் சங்கத்தில் பதிவு செய்திருப் பதோடு, குறைந்தபட்சம் குற்றவியல் நீதிமன்றங்களில் 5 ஆண்டுகள் வழக்குரைஞ ராக பணியாற்றிருக்க வேண்டும். போதிய தமிழ் அறிவு பெற்றிருத்தல் வேண் டும்.*

*வயதுவரம்பு: 1.7.2024 தேதியின்படி 26 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 36 வயது நிறைவடைந் திருக்கக் கூடாது.*

*தேர்வு செய்யப்படும் முறை: முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வு (எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அடங்கி யது) மூலம் தகுதியானவர் கள் தேர்வு செய்யப்படுவர்.*

*முதல்நிலைத் தேர்வா னது முதன்மைத் தேர்வுக் காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான தேர் வாகும். முதன்மைத் தேர் வுக்கு அனுமதிக்கத் தகுதி யானவர்களாக அறிவிக்கப் படும் தேர்வர்கள் முதல்நி லைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள், இறுதித் தகுதிக்கு கணக்கில் எடுத் துக் கொள்ளப்படாது.*

*குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களின் அடிப்ப டையில் முதன்மைத் தேர் விற்கு தகுதியான தேர்வர்க ளின் பட்டியல் தேர்வா ணையத்தால் வெளியிடப் படும்.*

*முதல்நிலைத் தேர்வு நடைபெறும் நாள்: 14.12.2024*

*முதன்மைத் தேர்வு: முதல்நிலைத் தேர்வு முடிவு கள் அறிவிக்கப்படும்போது வெளியிடப்படும்.*

*விண்ணப்பிக்கும் முறை: தகுதியானவர்கள் www.tnpscexams.in என்ற இணைய தளத்தின் மூலம் ஆன்லை னில் விண்ணப்பிக்க வேண் டும்.*

*தேர்வு மையம்: சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகர் கோவில், மதுரை, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல் வேலி, வேலூர், விருதுநகர்.*

*முதன்மைத் தேர்வானது சென்னையில் மட்டும் நடைபெறும்.*

*தேர்வுக் கட்டணம்: தேர் வுக் கட்டணச் சலுகை கோராதவர்கள் முதல் நிலைத் தேர்வுக்கு கட்டண மாக ரூ.100 செலுத்த வேண் டும்.*

*முதல்நிலைத் தேர்வு முடிவுகளின் அடிப்படை யில் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர் கள், தேர்வுக் கட்டணச் சலுகை கோராத நிலையில் முதன்மைத் தேர்வுக்கான கட்டணமாக ரூ.200 செலுத்த வேண்டும். கட்ட ணத்தை இணைய வங்கி, வங்கிகளின் பற்று அட்டை, கடன் அட்டை)இவற்றில் ஏதேனும் ஒரு முறையில் ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.*

*முதல்நிலைத் தேர்வில் சட்டம் தொடர்பான ஒரு தாளுடன் கூடுதலாக பொது அறிவுத் தாளும், முதன்மைத் தேர்வில் ஏற்க னவே உள்ள சட்டம் தொடர்பான 4 தாள்களு டன் கூடுதலாக கட்டாய தமிழ் மொழித் தாளும் இடம்பெறுகின்றன. தமிழ் மொழித் தாளில் தேர்ச்சி பெற்றாலே போதுமானது. இதில் பெறும் மதிப்பெண் கள் தெரிவு பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளப்படாது.*



திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூத்தாநல்லூர் நகரத்தில் உள்ள அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் வழங்கப்பட்ட விலையில்லா மிதிவண்டிகளை, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. மாணவியரிடம் வழங்கினார். நகர கழக செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா, தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள், நகர கழக நிர்வாகிகள், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, கண்டமங்கலம் கிழக்கு ஒன்றியம் வனத்தாம்பாளையம் கழக உடன்பிறப்பு வேலு அவர்கள் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், வே.கணேசன், கு.செல்வமணி, மகேந்திர வர்மன், இலட்சுமணன், எல்.செந்தில், இள முருகன், ஜி.பி.பாலு, இ.எஸ்.ஆர்.சுரேஷ், பிரவின் குமார், ரஞ்சிதம் பாலகிருஷ்ணன், என்.என்.இளங்கோ, சுவை.சுரேஷ், கோல்டு வெங்கடேசன், ப.அன்பரசு, அரவிந்தன், ராமதாஸ், அரவிந்த், சுந்தர், இளமாறன், சந்தோஷ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




